இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு:83 – ஒலி:119 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 23 – ஞாயிற்றுக்கிழமை 08 டிசம்பர் 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:83 - Issue 119: Thiruvalluvar Year - 2055 - Karthigai 23 - Sunday 08 December 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற விழாவில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னத திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிடும் முதற்கட்டமாக 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களுக்கான சாவிகளை தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கி, அவ்வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, கு.செல்வப்பெருந்தகை, இ.பரந்தாமன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மதவெறி – சாதிவெறி எண்ணம் பெரியார் வாழ்ந்த இம் மண்ணில் ஒருபோதும் நிறைவேறாது!

# சமூக நீதியை நிலைநாட்டி சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவோம்!

## அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி நடைபெற்ற அரசு விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

**சென்னை, டிச.8-**

**மதவெறி - சாதிவெறி எண்ணம் பெரியார் வாழ்ந்த இம்மண்ணில் ஒருபோதும் நிறைவேறாது எனவும், சமூக நீதியை நிலைநாட்டி சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவோம் எனவும் அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி நடைபெற்ற அரசு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபட உரையாற்றினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) சென்னை, இராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற, தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர் களாக மாற்றும் உன்னதத் திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்குதல் மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:-

நம்முடைய அறிவாசான் தந்தை பெரியார் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களைப் பற்றி என்ன சொன்னார் என்று கேட்டால், டாக்டர் அம்பேத்கருக்கு சமமாக, இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது என்று சொன்னார். நம்முடைய கருத்துகள் அனைத்தையும் அவர் பேசி இருக்கிறார். அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொன்னார். "எனக்குத் தலைவராக இருக்கும், தகுதியைப் படைத்தவர் அம்பேத்கர்" என்று அவரை போற்றியவர் தந்தை பெரியார் அவர்கள். அப்படிப்பட்ட 'அறிவுலக மேதை' புரட்சியாளர் அம்பேத்கரை அவருடைய நினைவு நாளில் நான் இங்கு வணங்கி, என்னுடைய உரையை தொடங்குகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் புரட்சியாளர் அம்பேத்கருடைய புகழை எப்படிப் போற்றினார்? ஒரு பெரிய பட்டியல் இருக்கிறது. சுருக்கமாக சொல்கிறேன். 1972ல் இந்தியாவிலேயே முதன்முதலாக அண்ணல் அம்பேத்கர் பெயரில் அரசுக் கல்லூரி, 1989ல் சென்னை சட்டக் கல்லூரிக்கு அண்ணல் அம்பேத்கர் பெயர், 1990ஆம் ஆண்டு புரட்சியாளர் அம்பேத்கரின் நூற்றாண்டு விழா, அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக எடுப்பவர்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி, 1997ல் சென்னையில் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு "டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்" என்று பெயர் சூட்டினார், சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் பெயரில் கல்வி அறக்கட்டளை, அம்பேத்கர் பெயரில் விருது, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அவருடைய சிலை, சென்னையில் மணிமண்டபம் என்று புரட்சியாளர் அம்பேத்கரை போற்றியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்!

### அண்ணல் அம்பேத்கர் புகழை தொடர்ந்து போற்றி வரும் கழக அரசு!

**1972ல் இந்தியாவிலேயே முதன்முதலாக அண்ணல் அம்பேத்கர் பெயரில் அரசுக் கல்லூரி, 1989ல் சென்னை சட்டக் கல்லூரிக்கு அண்ணல் அம்பேத்கர் பெயர், 1990ஆம் ஆண்டு புரட்சியாளர் அம்பேத்கரின் நூற்றாண்டு விழா, அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக எடுப்பவர்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி, 1997ல் சென்னையில் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு "டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்" என்று பெயர் சூட்டினார், சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் பெயரில் கல்வி அறக்கட்டளை, அம்பேத்கர் பெயரில் விருது, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அவருடைய சிலை, சென்னையில் மணிமண்டபம் என்று புரட்சியாளர் அம்பேத்கரை போற்றியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்!**

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### ஃபெஞ்சல் புயல் : நிவாரணப் பணிகள் – நிரந்தர மற்றும் தற்காலிக மறுசீரமைப்புப் பணிகளுக்காக

# தமிழ்நாட்டிற்கு 6,675 கோடி ரூபாய் வழங்கப் பரிந்துரைத்திடுவீர்!

## சென்னை – தலைமைச் செயலகத்தில் தம்மைச் சந்தித்த பல்துறை ஒன்றியக் குழுவிடம் – முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 8 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, ஃபெஞ்சல் புயலின் தாக்கத்தினை கள ஆய்வு செய்ய வருகை தந்துள்ள பல்துறை ஒன்றியக் குழுவினர் சென்னை - தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினர். ஒன்றியக் குழுவிடம் தமிழ்நாட்டிற்குத் தேவையான நிவாரணப் பணிகள், நிரந்தர மற்றும் தற்காலிக மறுசீரமைப்புப் பணிகளுக்காக 6675 கோடி ரூபாய் வழங்கப் பரிந்துரைத்திட வேண்டும் என்று முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார்.**

அதன் விவரம் வருமாறு: -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ள வருகை தந்துள்ள பல்துறை ஒன்றிய குழு - ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை இணைச் செயலாளர் முனைவர் இராஜேஷ் குப்தா, ஒன்றிய விவசாய மற்றும் உழவர் நலத் துறை இயக்குநர் முனைவர் கே. பொன்னுசாமி, ஒன்றிய நிதித்துறை இயக்குநர் சோனாமணி அவுபம், ஒன்றிய ஜல்சக்தி துறை இயக்குநர் ஆர்.சரவணன், ஒன்றிய சாலை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை முன்னாள் பொறியாளர் தனபாலன் குமரன், ஒன்றிய எரிசக்தித் துறை உதவி இயக்குநர் ராகுல் பாட்ச்கேட்டி, ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் பாலாஜி ஆகியோர் சந்தித்தனர்.

தமிழ்நாட்டில் நவம்பர் 26 முதல் வீசத் தொடங்கிய ஃபெஞ்சல் புயலின் காரணமாக வரலாறு காணாத அதிக கனமழை பொழிவு ஏற்பட்டு கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதோடு பெரும் சேதத்தையும் உண்டாக்கியது. இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, முதல்வர் அவர்கள் 2.12.2024 அன்று எழுதிய கடிதத்தில், ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்ட சேதங்களிலிருந்து தமிழ்நாட்டை மீட்க முதற்கட்ட ஆய்வின்படி தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.2,475 கோடி தேவைப்படுகிறது எனக் குறிப்பிட்டதோடு,



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ள வருகை தந்துள்ள பல்துறை ஒன்றியக் குழுவின் தலைவரான ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை இணைச் செயலாளர் முனைவர் இராஜேஷ் குப்தா அவர்களிடம் ஃபெஞ்சல் புயலின் தற்காலிக மற்றும் நிரந்தர மறு சீரமைப்புப் பணிகளுக்கு நிதி வழங்கிட வேண்டி முழு விவரங்கள் அடங்கிய கோரிக்கை மனுவினை (MEMORANDUM) அளித்தார். உடன் ஒன்றியக் குழு உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்